# அசிங்கமான வாத்துக்குஞ்சு (எளிதாக நோர்வேயிய மொழியில்)

கதை எழுதியவர்: டென்மார்க் ஆசிரியர் எச்.சி. அண்டர்சன்.

ஒரு இடத்தில் ஒரு வாத்துக்கூடு இருந்தது. அந்தக் கூட்டில் ஒரு தாய்வாத்துப் படுத்திருந்து, முட்டைகளை அடைகாத்து வந்தது. தனியே முட்டைமேல் படுத்திருக்க அதற்குப் பிடிக்கவில்லை, எப்போது குஞ்சுகள் முட்டையில் இருந்து வெளியே வரும்? என எதிர்பார்த்துக் காத்திருந்தது. முட்டையில் இருந்து குஞ்சுகள் வெளியே வரத்தொடங்கின. எல்லாக் குஞ்சுகளும் முட்டையில் இருந்து வெளியே வந்துவிட்டன. ஆனால் ஒரு பெரிய முட்டையில் இருந்து மட்டும் குஞ்சு வெளியே வரவில்லை.

"இப்போது நான் அதிக நாட்களாக முட்டை மேல் படுத்துவிட்டேன். இன்னும் கொஞ்ச நாட்கள் படுத்திருப்போம்" என்று நினைத்து வாத்து மீண்டும் முட்டையில் படுத்தது.

தாய்வாத்து நீண்ட நாட்களாக அடைகாத்து வந்தது. இறுதியாக, முட்டை உடைந்து "பிப், பிப்", என்ற சத்தத்துடன் வாத்துக்குஞ்சு வெளியே வந்தது. அது மிகவும் பெரியதாகவும் அசிங்கமாகவும் இருந்தது. தாய்வாத்து, "அது மிகவும் பெரியது " என்று கூறியது. "அது உண்மையில் மிகவும் அழகாகவும் இருக்கிறது. இப்போது என் குழந்தைகளே! வாருங்கள் , நான் உங்களுக்கு உலகத்தைக் காட்டுகிறேன்" என்று கூறியது.



அவை நீண்ட தூரத்திற்கு, நீண்ட நாட்களாக நீந்தி, இறுதியாக வாத்துக்கள் நிரம்பிய இடத்திற்குள் நுழைந்தன. அங்கே பல வாத்துக் குடும்பங்கள் இருந்தன. "பெரிய அசிங்கமான வாத்தைப் பாருங்கள்" என்று ஒரு வாத்து சொன்னது. "ஆமாம், அது இங்கே இருப்பதை நான் விரும்பவில்லை," என்று சொன்னது இன்னொரு வாத்து.



அது மட்டுமல்லாமல் அதைக் கொத்தியது. "அப்படிச் செய்யாதே, அதைத் தொந்தரவு செய்யாதே" என்று அம்மா வாத்துக் கூறியது. "அது எங்களுடன் இருக்க வேண்டாம்" என்று மற்ற வாத்துக் கூறியது.


"அது பெரிய அழகில்லை, ஆனால் அது மிகவும் நல்லது, சந்தோசமானது, அத்துடன் நன்றாக நீந்தும்" என்று அம்மா வாத்துக் கூறியது. மற்ற வாத்துக்கள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன. ஆனால் அந்தப்



பெரிய வாத்தை மட்டும் தள்ளி, உதைத்து, புண்படுத்திக் கேலி செய்தன. யாரும் அதற்கு இரக்கம் காட்டவில்லை. முதல் நாள், இப்படி எல்லா வாத்துக்களும் நடந்து கொண்டன. நாட்கள் செல்லச் செல்ல இன்னும் மோசமாக எல்லா வாத்துக்களும் நடந்து கொண்டன.

ஒரு நாள், "சரி, இனி பட்டதெல்லாம் போதும்" என்று பெரிய வாத்துக்குஞ்சு நினைத்தது. வேலிக்கரையை நோக்கி ஓடிச்சென்று வேலிக்கு மேலால் பறந்தது. மறுபுறத்தில் சில சிறு பறவைகள் இருந்தன. அவை பயந்தன. பெரிய வாத்துக்குஞ்சு "நான் மிகவும் அசிங்கமாக இருப்பதால் தான் இப்படி எல்லாம் நடக்கிறது", என்ற கவலையுடன் இருந்தது. பெரிய வாத்துக்குஞ்சு நீந்தத் தொடங்கியது. நீந்தி, நீந்தி இறுதியாக வாத்துக்கள் வாழும் இன்னொரு இடத்திற்கு வந்தது. இங்கே அது சோகமாகவும் சோர்வாகவும் கீழே படுத்தது.

வாத்துக்குஞ்சு இரண்டு நாட்களுக்கு அங்கே இருந்தது. பின் அவ்விடத்தை விட்டுச் சென்று நீந்திப், பறந்து, நீரில் மூழ்கிச் சென்றது. அது மிகவும்



அசிங்கமாக இருந்ததால் வேறு விலங்குகள் அவருடன் பேசவில்லை. இப்போது இலையுதிர்காலமாகிவிட்டது. இலைகள் மஞ்சள் நிறமாக மாறி விழுந்தன. எங்கும் குளிராக இருந்தது. வாத்துக்குஞ்சுக்கு வருத்தமாக இருந்தது.

ஒரு நாள் மாலை சூரியன் மறையத் தொடங்கியது. அப்போது பெரிய வெள்ளை பறவைகள் புதர்களிடையே இருந்து வெளியே வந்தன. அவை அன்னப்பறவைகள். வாத்துக்குஞ்சு, அவை அழகாக இருப்பதாக நினைத்தது. அன்னப்பறவைகள் தங்கள் சிறகுகளை விரித்து இந்தக் குளிர்ந்த இடத்தை விட்டு வெப்பமான நாடுகளுக்குத் தப்பிச் சென்றன. அந்தப்பறவைகளுக்கு என்ன பெயர் என்று தெரியாது. அவை எங்கு போகின்றன என்று தெரியாது. ஆனால், அவை மீது இனம் புரியாத கவர்ச்சி ஏற்பட்டது. அவற்றுடன் சேர விரும்பிய தன் இதயத் துடிப்பை உணர்ந்தது. அதனால் அவற்றுடன் சேர்ந்து திரிய ஆசைப்பட்டது. ஆனால், அதனால் அவற்றை பின் தொடரமுடியவில்லை. வாத்துக்குஞ்சு அப்பறவைகளை மிகவும் நேசித்தது. தான் அவற்றுடன் இருக்க வேண்டும் என்று உணர்ந்தது. நான் மிகவும் அசிங்கமாக இருந்தபோதிலும் ஒருவேளை அவை என்னுடைய நண்பர்களாகலாம்? என்று நினைத்தது.



குளிர்காலம் வந்தது. அப்போது குளிரும் படிப்படியாக அதிகரித்தது. வாத்துக்குஞ்சு சுற்றிச்சுற்றி நீந்தியது, ஆனால் தண்ணீரில் பனிக்கட்டிகள் மேலும் மேலும் அதிகமாயின. அதனால் மேற்கொண்டு நீந்தமுடியவில்லை. இறுதியில் பனிக்கட்டிகளோடு பனியாக உறைந்துவிட்டது. நீண்ட குளிர்காலம் என்பதாலும், தனியாக இருந்ததாலும் வாத்துக்குஞ்சுக்கு மிகவும் கடினமாக இருந்தது. வசந்தகாலம் வந்தது. சூரியன் வெப்பத்தைத் தந்தது. முதலில் பூக்கள் பூத்தன. வாத்துக்குஞ்சுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அது ஒரு தோட்டத்தின் அருகே இருந்த அழகான நீர்த்தடாகத்திற்குப் பறந்து சென்றது. அங்கே, மிக மூன்று அழகான பறவைகள் வந்தன. அவை அழகானவை மட்டுமல்ல, மிகவும் அழகாக நீந்தின! "அது அவை இருக்கும் இடத்திற்கு நீந்தலாம் என விரும்பியது. அசிங்கமாக இருப்பதால் ஒருவேளை அவை என்னை கொல்லலாம்" என நினைத்தது. ஆனால் என்னை யாரும் தொந்தரவு செய்வதைவிட என்னைக் கொன்றுவிடுவது நல்லது என்று நினைத்தது. அதனால், அவை இருந்த இடத்தை நோக்கி நீந்தியது. அவை தம் இறக்கைகளை விரித்தன. அது "ஆம், என்னைக் கொல்லுங்கள்" என்று கூறி கீழ் நோக்கிப் பார்த்தது. அப்போது தண்ணீரில் தன் விம்பத்தைப் பார்த்தது. ஆனால், அது தண்ணீரில் என்ன பார்த்தது? அது அந்த அசிங்கமான வாத்துக்குஞ்சைப் பார்க்கவில்லை, அது ஒரு அழகான அன்னத்தைப் பார்த்தது. ஆம்! அது ஒரு அன்னம் தானே. அங்கே சில பிள்ளைகள் தண்ணீருக்குள் இறங்கி வந்தனர். "பாருங்கள், அங்கே அன்னங்கள்," என்று அவர்கள் கூச்சலிட்டனர். "அது ஒரு புதிய அன்னம், எல்லாவற்றையும் விட அழகானது, நல்லது" என்று கூறினர். மற்ற அன்னங்கள் அதை அன்பாக வரவேற்றன. வாத்துக்குஞ்சுக்கு வெட்கமாக இருந்தது, ஆனால் மிகவும் மகிழ்ச்சியடைந்தது.